(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **107**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 ஒக்தோபர் 07, வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மங்கள சமரவீர,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மொஹான் லால் கிரேரு,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டிலான் பெரேரா,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ சிறிபால கமலத்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அப்துல்லா மஹரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தார்,— அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் **"சேர்பெறுமதி வரி (திருத்தம்)"** எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் பிரதியொன்று கிடைக்கப்பெற்றுள்ளது என்பதனை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

**2. பத்திரங்கள் சமர்ப்பணம்:** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழு அறிக்கைகள் சமர்ப்பணம்:** (1) சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ லகி ஜயவர்தன, **சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல்** பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்திய ''மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம்'' எனும் சட்டமூலம் தொடர்பில் அக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) வலுச்சக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ சந்திம கமகே, வலுச்சக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்திய ''2013 ஆம் ஆண்டுக்கான அணுசக்தி அதிகார சபையின் ஆண்டறிக்கை", "2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கைகள்", "2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை மின்சார சபையின் ஆண்டறிக்கை" மற்றும் "2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க , இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்" எனும் விடயம் தொடர்பில் அக் குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. மனுக்கள்:**

(i) ஊருபொக்க, ஹஸரெலிகம, இல. 01 இல் வதியும் திரு. தனபால முனசிங்கவினது 2016.08.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கம்புறுகமுவ, மெதகொட, ''சமன்'' எனும் விலாசத்தில் வதியும் திரு. எச்.பீ. நிரோசன் சாமிந்த தனபாலவினது 2016.08.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ புத்திக பத்திறண சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1, 2, 3, 4 மற்றும் 5 ஆம் இலக்க விடயங்கள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 20(7) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அமர்வு (இல. 1):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், 2016 ஒக்தோபர் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 26 ஆம் திகதி புதன்கிழமை, 27 ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்கள் சபை அமர்வு தினங்களாக இருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பாராளுமன்ற அமர்வு (இல.2):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், 2016 ஒக்தோபர் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. பாராளுமன்ற அமர்வு (இல. 3):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், 2016 ஒக்தோபர் 26 ஆம் திகதி புதன்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. பாராளுமன்ற அமர்வு (இல. 4):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், 2016 ஒக்தோபர் 27 ஆம் திகதி வியாழக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. பாராளுமன்ற அமர்வு (இல. 5 ):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. பாராளுமன்ற அமர்வு (இல. 6):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2016, ஒக்தோபர் மாதம் 20 ஆம் திகதி, வியாழக்கிழமை மு.ப. 10.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.35 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**12. கால்நடைகளுக்கு உகந்த மேய்ச்சல் நிலம் ஒதுக்குதல்:** கௌரவ அப்துல்லா மஹரூப் கௌரவ டக்ளஸ் தேவானந்த அனுவதிக்க சமர்ப்பித்த பிரேரணை,— திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 250,000 கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் தேவைப்படுவதாலும் மேய்ச்சலுக்கென ஒதுக்கப்பட்ட நிலம் இம்மாவட்டத்தில் காணப்படாமையால் பால் உற்பத்தியை மேம்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கை பாதிப்புக்கு உள்ளாவதாலும் திருகோணமலை மாவட்டத்தில் உகந்ததொரு மேய்ச்சல் நிலம் அறிவிக்கப்பட்டு ஒதுக்கப்படுவதுடன் வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.143/ '15]

"கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்குவாராக" என பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.54 மணிக்கு கௌரவ லக்கி ஜயவர்தன தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்:** கௌரவ புத்திக பத்திறண, கௌரவ அசோக்க பிரியந்த அனுவதிக்க சமர்ப்பித்த பிரேரணை,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக் கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.8/ ' 15]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. வட மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இலங்கை கல்வி நிருவாக சேவையின் விசேட பதவியணி வெற்றிடங்களை மூப்புரிமை மற்றும் திறமையை அடிப்படையாகக் கொண்டு நிரப்புதல் அத்துடன் போட்டிப் பரீட்சையிலிருந்து விடுவித்து III ஆம் தரத்திற்கு நியமித்தல்:** கௌரவ டக்ளஸ் தேவானந்தா, கௌரவ செயிட் அலி சாஹிர் மவுலான அனுவதிக்க பிரேரித்த பிரேரணை,— வட மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இலங்கை கல்வி நிருவாக சேவையின் விசேட பதவியணி வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பில் சரியான பகுப்பாய்வை மேற்கொண்டு இப்பதவிகளுக்குரிய கடமைகளை நிறைவேற்றி வருகின்ற இலங்கை அதிபர் சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களின் மூப்புரிமையையும், திறமையையும் கவனத்திற்கொண்டு இவர்களை இலங்கை கல்வி நிருவாக சேவை போட்டிப் பரீட்சையிலிருந்து விடுவித்து கல்வி நிருவாக சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது. [பா.162/ ' 15]

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**15. ஒத்திவைப்பு (அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பின்னாய்வு மற்றும் மதிப்பீட்டுக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு) :** "இப்பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடாக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்குவாராக" என தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.53 மணிக்கு கௌரவ பிமல் ரத்நாயக்க தலைமை தாங்கினார்)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 3.30 மணிக்கு பாராளுமன்றம், இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கு ஏற்ப, 2016 ஒக்தோபர் மாதம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.